2026 ஏப்ரல் மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 136/2025

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW13 (LW15) – சதீஷ்குமார் |
| தகப்பனார் பெயர்: | அரவரசன் |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | வட்டாட்சியர், தேனி வட்டாட்சியர் அலுவலகம். |
| வயது : | 48 |

29.04.2026

(1, 2, 4, 8 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், தேனி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.07.2025ம் தேதி தேனி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்த போது, பழனிசெட்டிபட்டி காவல் ஆய்வாளர் 17.07.2025ம் தேதி ராஜா, மொக்கப்பாண்டி, மணிமாறன், அருள்வாசகம், மகேந்திரன், செல்வக்குமார், ஜெயமணி, கருப்பத்தேவர், சிலம்பரசர் ஆகிய எதிரிகள் நிதிநிறுவனம் நடத்துவதற்கு

அனுமதி ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா என்று விபரம் வழங்க எனக்கு கடிதம் அனுப்பினார்கள். அதற்கு நான் அலுவலக ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகளுக்கு நிதிநிறுவனம் நடத்துவதற்கு அனுமதி ஏதும் வழங்கவில்லை என்று 19.07.2025 ம் தேதி பதில் கடிதம் அனுப்பினேன். நான் அனுப்பிய பதில் கடிதம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

2. நான் சொல்வதுபோல் காவல் ஆய்வாளர் 17.07.2025 ம் தேதி எனக்கு கடிதம் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. கடன் கொடுத்து வட்டி வசூல் செய்யும் தொழில் செய்து வந்தால் தான் Money Lenders Act–ல் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான்.

**9 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

3. நான் சொல்வதுபோல் காவல் ஆய்வாளர் 17.07.2025 ம் தேதி எனக்கு கடிதம் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. கடன் கொடுத்து வட்டி வசூல் செய்யும் தொழில் செய்து வந்தால் தான் Money Lenders Act–ல் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். பொதுவாக ஒரு தனிநபர் மற்றொருவரிடம் கிரைய ஒப்பந்தம் செய்வதற்கும், நிதிநிறுவனம் நடத்த அனுமதி வாங்குவதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.04.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.29 18:15:18 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
29.04.2026